Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 | கதிர் : 146 | சித்திரை 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 21 ஏப்ரல் 2020 | வள்ளுவர் ஆண்டு

## நேற்று 33 பேர்

### 304 ஆக எகிறியது கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், ஏப்.21

நாட்டில் நேற்று மட்டும் 33 பேர் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அதையடுத்து நேற்றிரவு 10 மணி வரையான காலப் பகுதியில் மொத்தமாக 304 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். கொழும்பு 12, வாழைத்தோட்டம் பண்டாரநாயக்க வீதியைச் சேர்ந்த 32 பேரும், பிலியந்தலையைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவரும் கொரோனா தொற்றுடன் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர். நாட்டில் கடந்த மார்ச்மாதம் 31ஆம் திகதி ஒரே நாளில் 21 02

## ஒரே வீதியில் வசிக்கும் 33 பேருக்கு கொரோனா

### வாழைத்தோட்டத்தில் தொற்று தீவிரம்

கொழும்பு, ஏப்.21

கொழும்பில் நேற்றுக் கொரோனா தொற்றுக்குள்ளான 32 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு 12, வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியைச் சேர்ந்தவர்களே கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் நேற்றுமுன்தினம் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும், அங்கு நடத்தப்பட்ட சோதனையில் 32 பேருக்குத் தொற்று 10

## அபாயம் நீங்கவில்லை

### போதனா மருத்துவமனை பணிப்பாளர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளபோதும், இன்னமும் அபாய நிலைமை நீங்கவில்லை. பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி 02

## கொழும்பில் 5 இடங்கள் தீவிர கண்காணிப்பில்!

கொழும்பு, ஏப்.21


கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுத் தீவிரமடைந்துள்ளதை அடுத்துச்சன நெரிசல் மிக்க ஐந்து இடங்கள் தற்போது பலத்த கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளுக்குள் எவரும் உள்நுழையவோ, அங்கிருந்து வெளியேறவோ முற்றாகத்தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு 10

## சட்டமா அதிபர் திணைக்களம் பூட்டு!

கொழும்பு, ஏப்.21

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தால் சட்டமா அதிபர் அலுவலகம் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. இதேவேளை திணைக்களத்தின் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடு 10

## ஜூன் 20 தேர்தல்!



கொழும்பு, ஏப்ரல் 21

கொரோனாவின் தாக்கத்தையடுத்து ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்று தெரிவித்தார். 02

## 'கொரோனா' அபாய வலயமானது வாழைத்தோட்டம்

கொழும்பு, ஏப்.21

கொழும்பு 12, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் நேற்று வரை 59 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தியாவுக்குச் சென்று வந்த குடும்பப்பெண் மூலமாகவே கொரோனா வைரஸ் அந்தப் பகுதி முழுவதும் பரவியுள்ளது. அந்தப் பகுதி அதிதீவிர கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அனைவரும் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். 10



## வீடு உடைத்து நகை திருட்டு பெண் ஒருவர் நேற்று கைது!

யாழ்ப்பாணம், ஏப்.21

வீடு உடைத்துத் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்டக் 02

## இராணுவம் போதும் தேர்தல் வேண்டாம்

### இப்படிக் கூறுகிறது பொதுபல சேனா

கொழும்பு, ஏப்.21

தேர்தல் என்ற பேச்சை அரசு மூன்று மாத காலத்துக்கு எடுக்கக் கூடாது. முதலில் மக்களைப் பாதுகாக்கும்நடவடிக்கைகளை முன்னெடுக்க 02

## ஊரடங்கு அறிவிப்பில் நேற்று மாற்றங்கள்

கொழும்பு, ஏப்.21

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு ஏப்ரல் 27 திங்கட்கிழமை காலை 5 மணி வரை நீடிக்கப்படுகின்றது என்று அரசு அறிவித்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை தினமும் இரவு 08 மணி முதல் அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும், இந்த மாவட்டங்களுக்கு எதிர்வரும் 24ஆம் திகதி இரவு 8 02

## ஊரடங்கை தொடரும் கட்டாயத்தில் அரசு

யாழ்ப்பாணம், ஏப்.21

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படிருந்த ஊரடங்குச் சட்டத்தைப் படிப்படியாகத் தளர்த்த அரசு முயற்சிகளை எடுத்தி 02

## பலாலியிலுள்ள நால்வருக்கும் மிக விரைவில் பரிசோதனை

### சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தற்போது உள்ளவர்களுக்கு இன்னும் சில தினங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டிலிருந்த வந்த மதபோதகர் ஒருவருடன் பழகிய ஒருவருக்கு 02

## நேற்று...

நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன் பின்னர் கடந்த 14ஆம் திகதி 15 பேரும், நேற்றுமுன்தினம் 17 பேரும் இனங்காணப்பட்டனர். அதன் பின்னர் நேற்றே ஒரே நாளில் 33 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த அதிகரிப்புடன் கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 45 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 32 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்தில் 07 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 05 பேரும், கேகாலை மாவட்டத்தில் 03 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல், மாத்தறை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு, பதுளை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 10 மாவட்டங்களில் இன்னும் எவரும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை.

இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்களில் இருந்து 38 பேரும், வெளிநாட்டவர்கள் 03 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் ஒருவர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளார் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 304 பேரில் தற்போது 200 நோயாளிகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சீனப் பெண் உள்ளடங்கலாக இதுவரை 97 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

122 பேர் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-22,44)

## அபாயம்...

மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் நேற்றுக் காலை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் சமூகப் பரவல் இனங்காணப்படவில்லை. அதனால் மக்கள் அச்சப்படத் தேவையில்லை. அதற்காகக் கொரோனா அச்சம் முற்றாக நீங்கி விட்டது என்று கருத முடியாது.

ஊரடங்குச் சட்டம் தற்போது தளர்த்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். கொரோனா தொற்றில் இருந்து தற்காத்துக் கொள்ள இது முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் சேர்க்கப்பட்ட ஒருவரும், பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்த 16 பேரும் இதுவரை யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். தொற்று உறுதி செய்யப்பட்ட 4 பேர் குணமாகியுள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தொடர்ந்து 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெறும் மேலும் சிலரும் குணமடைந்து வருகின்றனர்- என்றார். (எ,,க20)

## இராணுவம்...

வேண்டும். நாட்டை நாசமாக்கும் அரசியல்செயற்பாடுகளை எம்மால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்கள் தற்போது நாடாளுமன்றத்தையோ, அமைச்சர்களையோ எதிர்பார்க்கவில்லை. இராணுவம் நாட்டைப் பொறுப்பேற்றால் போதுமானது என்ற நிலையில் பெரும்பான்மையான மக்கள் உள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளது பொதுபல சேனா அமைப்பு.

அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரசியல் தீர்மானத்துக்கும் அப்பால் சுகாதாரத் துறையின் ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். நாட்டில் மிக மோசமான சூழல் காணப்படும் நிலையில் அரசு எக்காரணம் கொண்டும் பொதுத் தேர்தலை நடத்தக்கூடாது என்பதே அரசுக்கு நாம் கூறும் அறிவுரையாகும்.

அரசுக்குத் தேர்தலை நடத்தும் நோக்கம் இருந்தாலும் வாக்களிக்க மக்கள் தயாராக இல்லை. எனவே மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு தேர்தலைப் பிற்போட வேண்டியதே அரசு தற்போது செய்ய வேண்டியதாகும்.

நாம் இதுவரை காலம் கூறிய முன்வைத்த, முன்னெடுத்த கொள்கையையே இந்த அரசு தற்போது பின்பற்றுகின்றது. ஆனால் நாம் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை. ஆனாலும் மக்களின் பக்கம் நாம் எப்போதும் சிந்திக்கின்றவர்கள் என்ற வகையில் தேர்தலைப் பிற்போட வேண்டும் என்று கோருகின்றோம். மக்கள் தற்போது நாடாளுமன்றத்தையோ, அமைச்சர்களையோ எதிர்பார்க்கவில்லை. இராணுவம் நாட்டைப் பொறுப்பேற்றால் போதுமானது என்ற நிலையில் பெரும்பான்மையான மக்கள் உள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலை அடுத்து ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்பு தரப்பினர் மற்றும் வைத்தியர்கள் மிகச் சரியாக செயற்பட்டு வருகின்றனர். ஜனநாயகத்தை நாசமாக்கி இராணுவ ஆட்சியை கொண்டு வாருங்கள் என நாம் கூறவில்லை. சர்வாதிகாரிகளை உருவாக்குவதல்ல எமது நோக்கம். ஆனால் இன்று நாம் எதிர்நோக்கும் சூழலை கையாள வேண்டிய தேவை உள்ளது. மக்களை எவ்வாறு பசி பட்டினியில் இருந்து மீட்டெடுப்பது, நாட்டை எவ்வாறு பாதுகாப்பது என்பதே அவசியமாகும். இதில் ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டம் சிறந்ததாக கருதுகின்றோம். இப்போது தேர்தலை நடத்தாது பாதுகாப்பு படைகளை கொண்டு நாட்டைக் கொண்டு செல்ல வேண்டும். மூன்று மாதகாலமேனும் தேர்தலைப் பிற்போட்டு மக்களை பாதுகாப்போம். இதில் அரசமைப்பைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அரசமைப்பு ஒன்றும் மக்களை மீறிய விடயமல்ல. மக்களை பாதுகாக்கவே சட்டம், அரசமைப்பு அனைத்தும் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசியல் வாதிகள் அதிகாரத்தை தக்க வைக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவோ, ஆட்சியை தக்கவைக்க வேண்டும் என்பதற்காக மக்களை நாசமாக்க வேண்டாம்-என்றார். (எ)

## ஊரடங்கு...

மணிக்கு நடைமுறையாகும் ஊரடங்கு 27ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்று 303 ஆக அதிகரித்துள்ளது. கொழும்பில் 33 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானதை அடுத்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன்படி எதிர்வரும் புதன்கிழமை ஊரடங்கு நீக்கப்படவிருந்த 04 மாவட்டங்களின் ஊரடங்கு தொடர்ந்தும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில், அந்த மாவட்டங்களில் இருந்து வெளியேறவும் உள்நுழையவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஊரடங்கு காலப்பகுதிக்குள் விவசாயத்துறை மற்றும் அத்தியாவசிய சேவையினருக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## ஊரடங்கை...

ருந்தபோதும், தற்போது ஊரடங்குச் சட்டத்தைத் தொடர வேண்டிய இக்கட்டு நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் தினமும் அடையாளம் காணப்பட்டு வருவதாலும், ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் இடங்களில் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது நடந்து கொள்வதாலும் சுகதார நிலைமைகள் மேம்பட்ட நிலையை அடையும் வரை ஊரடங்குச் சட்டத்தை முழுமையாக நீக்காதிருக்க அரசு தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. (எ)

## வீடு...

குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்று உடைத்துப் பணமும், நகைகளும் திருடப்பட்டிருந்தன. அந்த வீட்டில் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் தங்கியிருந்த நிலையில் அவர்களின் நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்களும் திருடப்பட்டிருந்தன. 30 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டிருந்த பொலிஸார், சந்தேகநபர்களைத் தேடி வந்தனர். இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்றுப் பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 30 வயதுடையவர் என்றும், அவரிடம் இரு சோடிக் காப்புகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். திருநெல்வேலியில் உள்ள நகைக் கடை ஒன்றில் அடைவு வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்தக் காப்புகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர்கள் பிரதீப், சுபசிங்கே ஆகியோரின் தலைமையில் இந்த கைது நடவடிக்கை நடந்துள்ளது. (எ-20,26,111)

## பலாலியிலுள்ள...

கொரோனா தொற்று இருப்பதாக அடையாளம் காணப்பட்டது. அந்த மதபோதகருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த சுமார் 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் முதலில் 6 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் எஞ்சியவர்களுக்கு நடத்திய பரிசோதனைகளில் அதிலும் 8 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் பின்னர் ஏனைய 6 பேருக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 2 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் தற்போது எஞ்சியுள்ள 4 பேருக்கும் கொரோனா தொற்று பரிசோதனை செய்வதற்கு சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தீர்மானித்திருக்கின்றார். இதனடிப்படையில் குறித்த 4 பேருக்கும் சில தினங்களில் யாழ்ப்பாணத்தில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன- என்றார். (த-20)

## ஜூன்...

ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத் தேர்தல், வேட்பு மனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர் கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பான விசேட கூட்டம் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெற்றது. மருத்துவ நிபுணர்கள், பாதுகாப்புப் படைகளின் பிரதானி உட்பட முக்கிய பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டனர்.

கொரோனா வைரஸ், அதனால் ஏற்பட்டுள்ள சமூக தாக்கம், அது எப்போது கட்டுக்குள் வரும் என்பன உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. இந்தச் சந்திப்பின் பின்னரே தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆராயவும், ஆலோசனை பெறவும் இன்று காலை அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய. பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடல் தொடர்பாக அவர் இன்று கட்சித் தலைவர்களுக்கு விளக்குவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

# வாழைத்தோட்டத்தை முடக்கியது கொரோனா

*இந்தியா சென்றுவந்த பெண்ணே காரணம் என இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.21

"கொழும்பு 12 வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் நேற்று மாலை வரை 59 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இந்தியாவுக்குச் சென்று வந்த குடும்பப் பெண் மூலமாகவே கொரோனா வைரஸ் அந்தப் பகுதி முழுவதும் பரவியுள்ளது. எனவே, அந்தப் பகுதியிலுள்ள அனைவரும் கட்டாயம் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வுள்ளனர்." இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற் பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியில் தொற்றுக்குள்ளா கியவர்களில் இந்தியா சென்று வந்த குறித்த பெண்ணின் கண வரும், இரு மகன்களும், உறவி னர்களும், அந்தப் பகுதியின் பக்கத்து வீடுகளில் இருந்தவர்களும் அடங்குகின்றனர். நாங்கள் நடத்தும் சோதனைகளில் தான் இவர்கள் அடையாளம் காணப் பட்ட னர். இவர்களில் 10 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதி நெருக்கமான பகுதி. அதனால் தான் அங்கு அதிகமா னோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து அந்தப்பகுதி அதிதீவிர கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டு முடக்கப் பட்டுள் ளது. எவரும் வெளியேயும் உள்ளேயும் செல்ல முடியாது. அங் குள்ளவர்களில் பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள் ளனர். எஞ்சியோரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள் ளனர்" என்றார். (கு-22)

# ஒரே நாளில் கூடுதல் நோயாளர்கள் பதிவு!!

## கொழும்பில் சதமடித்தது கொரோனா!

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் மார்ச் 11 முதல் நேற்று மாலை வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் உட்பட 15 மாவட்டங்களில் 303 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள் ளனர். நேற்று மாத்திரம் 32 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த வர்களில் இருந்தே இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி ஒரேநாளில் 21 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதன்பின்னர் ஏப்ரல் 14 ஆம் திகதி 15 பேர் இனங்கா ணப்பட்டனர். அதன்பின்னர் இன்றே ஒரே நாளில் 32 பேர் இனங்காணப்பட்டுள்ள னர்.

மாவட்ட ரீதியில் கொரோனா தொற்றாளர்களின் எண் ணிக்கை வருமாறு,

கொழும்பு 109, களுத்துறை 45, புத்தளம் 35, கம்பஹா 32, யாழ்ப்பாணம் 16, கண்டி 7, இரத்தினபுரி 5, கேகாலை 3, குருணாகலை 2, மாத் தறை 2, அம்பாறை 2, பதுளை 1, காலி 1, மட்டக்களப்பு 1, வவுனியா 1. (ஒ.5,44,22)

# மாவட்டச் செயலகம் நேற்று முற்றுகை

*வெளிமாவட்டத்தவர்களால் இந்த நிலைமை*

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் 26 நாள்களின் பின்னர் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், வெளி மாவட்டத்தவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்டனர். ஊடரங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதால், தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அவர்கள் முயன்றபோதும், ஆனையிறவுச் சோதனைச் சாவ டியில் மறித்து திருப்பி அனுப்பப்பட்டனர். திருப்பி அனுப் பப்பட்ட பொதுமக்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்டனர். சுமார் 300 பேர் வரையில் மாவட்டச் செயலகத் துக்கு வந்திருந்தனர்.

தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு ஏற்பாடு களைச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்த னர். வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களை அவர்களது மாவட்ட மாவட்டச் செயலர்களுடன் கலந்துரையாடி தமக்கு விவரங்களை வழங்குமாறு படைத் தரப்பு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

பொதுப் போக்குவரத்து மாவட்டத்துக்கு மாவட்டம் இல்லை என்றும், சொந்த வாகனங்களிலேயே அவர்கள் செல்ல வேண்டும் எனவும் பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் ஒரே தட வையில் எல்லோரும் செல்ல முடியாது எனவும் பகுதி பகுதியாகவே அவர்களை அனுப்ப முடியும் எனவும் படைத் தரப்பினர் கூறியுள்ளனர். (ஒ.5)

# யாழ். செயலகத்துக்கு வந்த நிவாரணம் கட்சிக்கா? நடவடிக்கை நிச்சயம்!

## நாகரிகமற்ற செயல் என்றும் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நன் கொடையாகக் கிடைத்த உதவிப் பொருள் களை அரசியல் கட்சிக்கு வழங்கியமை நாக ரிகமற்ற செயல். இதற்கு நிர்வாக ரீதியில் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் காலத்தில் இடம்பெறும் நடவடிக்கை கள் தொடர்பில் அவதானம் தேவை என்பதை அதிகாரிகள் புரிந்திருக்க வேண்டும். இது தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்தகைய செயற் பாடுகள் தற்போதும் தொடர்கின்றன என்று செய்திகள் வருகின்றன. இது வருத்தமளிக் கின்றது. அரசியலில் நாகரிகம் இருக்க வேண் டும்.

குறித்த விடயம் கவனத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத நிலையில் இவ்வாறு இடம்பெற்றிருப்பின் தயவு தாட்சண் யமின்றி உடன் நடவடிக்கைக்கே பரிந்துரைக் கப்படும். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறு கின்றன.

அதேநேரம் நான்கு தடவை இவ்வாறு நடை பெற்றது என்பதும் ஆச்சரியம் அளிப்பதா கவே உள்ளது. இந்த நடவடிக்கை தொடருமா னால் சமூக ஆர்வலர்கள் மாவட்டச் செயலகத் தில் நம்பிக்கை இழந்து விடுவர். அதற்காகவும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும். என்று மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுங் கட்சியில் அதிகாரத்துடன் உள்ளம் முன்னாள் டி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே நன் கொடையாக வழங்கப்பட்ட உதவிப் பொருள்களை அலுவலக அதிகாரிகள் ஊடாகத் திருடி, தனது கட்சியின் ஆதரவா ளர்களுக்கு அவற்றை வழங்கிவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத் தக்கது. (கு-105)

## சாவகச்சேரி நீதிமன்றில்

# மக்களை அழைக்காமல் வழக்குகள் நடத்தப்படும்

*சட்டத்தரணிகள் நெறிப்படுத்தவுள்ளனர்*

சாவகச்சேரி, ஏப்.21

கொரோனா அச்சம் காரண மாக, சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற வழக்குகளில், தேவை யேற்படின் மாத்திரம் முறைப் பாட்டாளர்களையோ எதிர்த்தரப்பி னரையோ அழைப்பது என்றும் அவர்கள் மன்றில் தோன்ற வேண்டிய அவசியமில்லாத வழக்குகளில் இருதரப்பினரதும் சட்டத்தரணிகள் மாத்திரம் மன் றில் முற்பட்டு வழக்கை நடத்து வது என்றும் முடிவெடுக்கப்பட் டுள்ளது. இந்தத் தீர்மானம் எதிர்வரும் திங்கட்கிழமையிலி ருந்து நடைமுறைக்குவரவுள் ளது என்று சாவகச்சேரி சட்டத் தரணிகள் சங்கச் செயலாளர் ப.குகனேஸ்வரன் தெரிவித்தார். இந்தவாரம் மிக மிக அவசிய மான வழக்குகளை மட்டும் மன்றில் எடுப்பது என்றும் தீர் மானிக்கப்பட்டுள்ளது. சாவகச் சேரி நீதிபதிக்கும் சாவகச்சேரி சட்டத்தரணிகளுக்கும் இடையி லான சந்திப்பு நேற்று நீதி மன் றில் நடைபெற்றது. அதில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. கொரோனா அச்சம் நிலவுவதால் நீதிமன்றில் அதிகளவு மக்கள் வருவதைத் தவிர்க்கும் முக மாக, சமூக இடைவெளியைப் பின்பற்றும் முகமாக இந்த நடை முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு மாதமாக வழக்குகள் நடை பெறாததால் வழக்குகள் நடை பெறும் புதிய திகதிகள் நீதிமன்ற அறிவித்தல் பலகையில் காட் சிப்படுத்தப்படும். சட்டத்தரணி கள் தமது கட்சிக்காரர்களுக்கு அறிவித்து வழக்குகளை நடத்த வும் முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட் டது. (கு-9)

# மன்னாரிலிருந்து 25 பஸ்கள் சேவை

மன்னார்,ஏப்.20

மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில், பொதுமக்களின் போக்குவரத்துச் சேவைக்காக, மன்னார் சாலை யில் இருந்து இன்று 25 அரச பஸ்கள் கடுமையான நிபந்த னை களுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

"கொரோனா வைரஸ் தொற்றுப் பரவாமல் இருப்பதற்காக பஸ்களில் பயணம் செய்பவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். ஒரு இருக்கையில் ஒருவர் மட் டுமே அமர முடியும். இருமல் தும்மல் போன்ற நோய்களுடன் வரு பவர்களை பஸ்களில் ஏற்றுவதில்லை" உள்ளிட்ட கடுமை யான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் னாரில் இருந்து அரச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளன என்று மன்னார் சாலை முகாமையாளர் தெரி வித்தார். (க-213)



# ஊரடங்குச் சட்டம் தளர்ந்தது கொரோனாவுக்கே வாய்ப்பு!

## மன். நகர முதல்வர் தெரிவிப்பு



மன்னார், ஏப்.21

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது எமது மக்களிடையே மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் 26 ஆவது அமர்வு நேற்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகர சபையில் இடம் பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்ற போதும் எமது நாட்டில் குறைந்த எண்ணிக்கையில் உயிர் இழப்புக்கள் மற்றும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் அரசாங்கம் இத்தடைகளை நீக்காமல் பகுதி அளவில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி இருக்கலாம். உடனடியாகக் கட்டுப்பாடுகளை நீக்கியிருப்பது எமது மக்களிடையே தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகுவதற்கு அதிக சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இவ்விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் ஊரடங்குச் சட்டத்தை முழுமையாக தளர்திக் கொள்ளாமல் பகுதி அளவில் தளர்த்திக்கொள்ள வேண்டும். தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த்திக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் மாவட்டம் விட்டு மாவட்டத்துக்கான பயணங்கள் தொடர்ந்துள்ளன. வேறு மாவட்டத்தில் இருந்து மன்னாருக்கு வருகின்ற உத்தியோகத்தர் ஒருவரினால்கூட எமது மாவட்டத்தில் உள்ள ஒருவருக்கு தொற்று ஏற்படலாம். அதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. எனவே அரசாங்கம் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்த வேண்டும்.

எதிர் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்திக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இலங்கையின் வைத்தியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையில் கொரோனா தொற்றும் முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவில்லை என அறிக்கை விடுத்துள்ளனர். எனினும் ஊரடங்குச் சட்டம் தளர்த்திக் கொள்ளப்பட்டதில் உள் நோக்கம் இருக்கின்றமை தெரிய வருகின்றது. அரசாங்கத்திற்கு தேர்தலே பிரதான இலக்காக உள்ளதே தவிர அவர்கள் மக்களின்நலனைகருத்தில்கொள்ளவில்லை. தற்போதையசூழ்நிலையில் மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளது. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ப-56)



## சமூக இடைவெளியுடன் பொருள்கள் கொள்வனவு!

திருகோணமலை,ஏப்.21

திருகோணமலை மாவட்டத்தில் ஊரடங்குச்சட்டம் நேற்று தளர்த்தப்பட்ட நிலையில் சமூக இடைவெளியை பேணி மக்கள் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டனர். திருகோணமலை, மூதூர், கிண்ணியா, முள்ளிப்பொத்தானை, சேருவில,வெருகல், குச்சவெளி பிரதேசங்களில்சமூக இடைவெளியைமக்கள்பின்பற்றியமையைக் காணக்கூடியதாகவிருந்தது.

சதொச உள்ளிட்ட முக்கிய வியாபார நிலையங்களில் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் கடமையில் ஈடுபட்டனர். (ஜ-40)

## நான்கு நாள்களின் பின்னர் முதியவர் சடலமாக மீட்பு

காணாமல்போன முதியவர் நான்கு நாள்களின் பின்னர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார். திருகோணமலை பூம்புகார் வீதி,அம்பியார் ஒழுங்கை பகுதியைச் சேர்ந்த பெருமாள் சோலைமுத்து (வயது -70) என்பவரே காட்டுப் பகுதியில் இருந்து இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது மருத்துவமனையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-114)

## ஊரடங்குச் சட்டம் தளர்வு; தென்மராட்சி வழமைக்கு

தென்மராட்சி, ஏப். 21

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த அலுவலகங்கள் நேற்று திறக்கப்பட்டன. அலுவலகங்கள் திறந்திருந்த போதிலும் பணியாளர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தளர்த்தப்பட்டது. இதனால் சாவகச்சேரியில் சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் மீண்டும் தமது வியாபாரத்தை மேற்கொண்டன. சந்தை திறக்கப்படவில்லை நகரப்பகுதியில் மக்கள் நடமாட்டம் காணப்பட்டது. பேருந்துச் சேவைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட நிலையில் அரச பணியாளர்கள் பேருந்துகள் சேவையில் ஈடுபடாததால் தரிப்பிடங்களில் நீண்டநேரம் காத்திருந்துவிட்டு வீடு திரும்பிய தைக் காணமுடிந்தது. தூர பிரதேசங்களுக்கான (யாழ்ப்பாணம் கொழும்பு பருத்தித்துறை கொழும்பு ) போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றன.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற சாலைகளின் பேருந்துகள் யாழப்பாணத்திற்கு சேவையில் ஈடுபடவில்லை.

ஏ 9 பிரதான வீதியில் பயணித்த அனைத்து வாகனங்களும், ஆனையிறவு சோதனைச் சாவடியில் பதிவு செய்யப்பட்டது. கடந்த ஒரு மாதமாக வேறு மாவட்டங்களில் தங்கியிருந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். (ப-9)

## விவசாயம் செய்யவென அனுமதி பெற்று காட்டு மரங்கள் அழிப்பு

### நாசமானது 20 ஏக்கர் காடு

திருகோணமலை, ஏப்.21

ஊரடங்கு வேளையில் விவசாயம் செய்யவென அனுமதி பெற்று, 20 ஏக்கர் காட்டில் மரங்களைத் தறித்து நாசமாக்கிய சம்பவம் ஒன்று திருகோணமலை குச்சவெளியில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான பன்குளம் வனப்பகுதியில் அமைந்திருக்கின்ற பல்லவ குளத்தை அண்மித்த பகுதிகளிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீரை, பாலை ஆகிய விருட்சங்களின் அடியில் எரியூட்டப்பட்டு அவை பட்டுப்போனதன் பின்னர், அவற்றை சிறு சிறு குற்றிகளாகத் தறித்து கடத்துவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. ஊரடங்கால் போக்குவரத்து இடையூறு உள்ளதன் காரணமாக வெட்டப்பட்ட மரக்குற்றிகள் வனப்பகுதியிலேயே விடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இதுவரை ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவலுக்கமைய மேலும் இருவர் தேடப்படுகின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர். (ப-114)

## ஆட்டக்காரி சங்கங்களில் தாராளம்

யாழ்ப்பாணம், ஏப்.21

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அளவு அரிசி வடக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. ஆட்டக்காரி வகை அரிசி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன என்று வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

அரிசி தேவைப்படும் சங்கங்கள் உடனடியாக சமாசத்துடன் தொடர்பு கொண்டு, அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியும். கூட்டுறவு சங்கங்கள் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலைக்கு, நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)



## ஊரடங்கு தளர்வு: அலைமோதினர் மதுப் பிரியர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் யாழ் நகரப் பகுதியில் உள்ள மதுபான நிலையங்களில், மதுப் பிரியர்கள் அலையெனத் திரண்டிருந்தனர். மதுபானத்தைக் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசையில் அவர்கள் காத்திருந்தனர்.

கொரோனா தாக்கம் காரணமாக நாடு முழவதும் நடைமுறைப் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று அனேக மாவட்டங்களில் தளர்த்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலும், ஊரடங்கு தளர்த்தப்பட்டது. முன்னதாக ஊரடங்கு தளர்த்தப்படும் போது மதுபான நிலையங்களைத் திறக்கலாம் என்று அரசு அறிவித்தது. இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தும் நேற்றுக் காலை திறக்கப்பட்டன. இந்த இடங்களில், மதுப் பிரியர்கள் வரிசையில் நின்று தமக்குத் தேவையான மதுபானங்களைப் பெற்றுக் கொண்டனர். (ஜ-7-105-108-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தற்போதைய தேவை தேர்தல் அல்ல

கொரோனா அச்சத்தால் ஒத்திவைக்கப்பட்ட பொதுத் தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ நிபுணர்கள், சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புப் பிரதானி உட்படத் துறைசார்ந்தவர்களோடு கலந்துரையாடி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த பொதுத் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் முடிந்த கையோடு திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டது. சீனாவில் தோற்றம் பெற்று பல நாடுகளையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவ ஆரம்பித்ததை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் நாடாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. அவற்றையும் மீறி நாட்டில் இதுவரை 304 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 7பேர் உயிரிழந்துள்ளனர். தினமும் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். நேற்றும் 33 பேர் கொழும்பில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த அச்சம் தரும் நிலைமையிலும் அரசு தேர்தலை நடத்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்துவது அபாயகரமானது, நாடாளுமன்றத்தைக் கூட்டுங்கள் என்று பிரதான கட்சிகள் அனைத்தும் கோரிக்கை விடுத்தும், அவற்றை எல்லாம் காதில் வாங்காது தேர்தலையும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதையும் இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது கோத்தாபய ராஜபக்ச அரசு.

தற்போது தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலை, கோத்தாபய ராஜபக்ச அரசின் போக்கால் தனி மனித பிடிவாதத்தால் மேலும் ஆபத்தானதாக மாறக் கூடும் என்ற அச்சம் எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. நாட்டில் கொரோனா தொற்று அபாயம் முற்றாக நீங்காத நிலையில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. இது ஒரு ஆபத்தான நகர்வு என்று பல தரப்புக்களும் எச்சரிக்கின்றன. அரசின் இந்த முடிவு எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டது என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

தற்போதுள்ள நிலைமையில் தேர்தலை நடத்துவதன் ஊடாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கோத்தாபய, மஹிந்த ராஜபக்ச தரப்பினர் நம்புகின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குலை முன்னிறுத்தித் தமது பரப்புரைகளை மேற்கொண்ட இந்தத் தரப்பு, பொதுத் தேர்தலில் கொரோனாவை முன்னிறுத்தி வெற்றி பெறலாம் என்று கருதுகின்றது. ஏனெனில் இன்றோரு ஓராண்டை நிறைவு செய்கின்ற ஈஸ்டர் தாக்குதலை முதன்மைப்படுத்தி இனி வாக்குக் கேட்டாலும் அதனால் பயனேதுமில்லை. அதனாலேயே கொரோனா அலையைப் பயன்படுத்தி ஆதாயமீட்டும் நோக்கோடு, தேர்தலை நடத்துவதில் அவசரம் காட்டி வருகின்றது அரசு . அதற்காக அரச தரப்பு தென்கொரியாவை உதாரணம் காட்டுகின்றது. ஆனால் வளர்ச்சியடைந்த நாடான தென்கொரியாவை, இலங்கையுடன் ஒப்பிடுவது பொருத்தமற்றது. அங்குள்ள நிலைமைகளும், இங்குள்ள நிலைமைகளும் ஒரே மாதிரியானவை என்று கொள்ள கொள்ளமுடியாது.

கொரோனா வைரஸ் தொற்றுத் தீவிமடைந்துள்ளதால், கொழும்புக்குள் உள்நுழையவோ, அங்கிருந்து வெளிச் செல்லவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் தேர்தல் பணிகளை அதிகாரிகள் மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். நியாயமான தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகமே. அதைவிடவும் தேர்தலின்போது மோசடிகள் மேற்கொள்ளப்படின் அவற்றைக் கண்டுபிடிக்க முடியாத நிலைமையும் காணப்படும்.

மறுபுறத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் தற்போது ஓரளவு கட்டுக்குள் உள்ள கொரோனா வைரஸ் தொற்று அதிகரிக்குமோ என்ற அச்சமும் ஏற்படுகின்றது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அபாய நிலைமையைத் தமது அரசியல் நோக்கத்துக்குப் பயன்படுத்துவதை விடுத்து அரசு மக்கள் நலன் சார்ந்து சிந்திக்க வேண்டும். தனி மனித பிடிவாதத்தால் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளக் கூடாது முன்னுள்ள அபாய நிலைமையை வெற்றி கொள்ளும் வழி வகைகளையே அரசு ஆராய வேண்டுமே ,தவிர தேர்தலை அல்ல.

# சமூக இடைவெளியின்றி அரச பேருந்துகளில் மக்கள்



**கொழும்பு, ஏப்.21**

**அத்தியாவசிய சேவைக்காக மட்டும் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த பொதுப் போக்குவரத்தில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது மக்கள் பயணங்களை மேற்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.
இந்நிலையில், பொதுப் போக்குவரத்து, அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் அறிவித்திருந்த போக்குவரத்து அமைச்சு, கடுமையான கட்டுப்பாடுகளையும் விதித்திருந்தது.
எனினும், அந்தக் கட்டுப்பாடுகள் யாவும் நேற்றைய தினமே மீறப்பட்டன.
காலியிலிருந்து மாத்தறைக்கு பயணித்த பேருந்துகளில் சமூக இடைவெளி பேணப்படவில்லை. வழமைப்போலவே கூடுதலாக பயணிகளை ஏற்றி பயணித்திருந்தன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)



# மாஸ்க் விற்பனைக்கு பொலிஸாரால் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.21
யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் சுகாதார பிரிவின் அனுமதி பெறாது, முகக்கவசம் விற்பனை செய்த வியாபாரிகள் பொலிஸாரால் அப்புறப்படுத்தப்பட்டனர். யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதிகளில் முகக்கவச விற்பனையில் நேற்றுச் சிலர் ஈடுபட்டனர். இதனை அவதானித்த பொலிஸார் வியாபாரிகளிடம் சென்று முகக் கவசம் சுகாதார பிரிவின் முறைப்படி தயாரிக்கப்பட்டதா எனச் சோதனை செய்தனர்.
பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அனுமதி பெற்று, சிபாரிசு செய்யப்பட்ட பின்னர், விற்பனையில் ஈடுபட வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தி, அவ்விடத்தில் வியாபார நடவடிக்கையைத் தடுத்தனர். (க-7)

# மாஸ்க்கை கவனித்த பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப்.21
ஊரங்குச் சட்டம் தளத்தப்பட்டதை அடுத்து, நேற்றுக் காலை வீதியால் முகக்கவசம் அணியாமல் சென்ற சிலர் பொலிஸாரால் மறிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டனர்.
முகக்கவசம் அணிந்த பின்பே வீதியால் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.
அநேகமான இடங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் கண்காணிப்பு நடவடிக்கைகளும் நேற்று தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. (க-17)

# யாழ்.பஸ் நிலையத்தில் கொரோனா விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.21
யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்தில், கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
ஊரடங்கு தளர்த்தப்பட்டதை அடுத்து பொது போக்குவரத்து சேவைகள் இடம்பெற்றன. பஸ்ஸில் பயணம் செய்வதற்காக மக்கள் பஸ் நிலையத்தில் குழுமி நின்றனர். இதனை அவதானித்த பொலிஸார், பயணிகளை அழைத்து விழிப்புணர்வு ஆலோசனைகளை வழங்கினர்.
தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் மக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.
அத்துடன் நடத்துநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. பயணிகள் அனைவரும் முக கவசம் அணிவதை உறுதிப்படுத்த வேண்டும், ஒவ்வொரு இருக்கையில் ஒருவர் என்ற வகையில் பயணிகள் அமர வைக்க வெண்டும், எவரும் நின்று கொண்டு பயணம் செய்ய முடியாது என்று அவர்களுக்கு அறிவுறுத்தினர். (க-7)



# பாடசாலையை ஆரம்பிக்காதீர்

## நிபுணர்கள், புத்திஜீவிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஏப்.21

**பொ**றுப்பற்ற வகையில் எதிர்வரும் 11 ஆம் திகதி பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டாம் என்று நிபுணர்களும், புத்திஜீவிகளும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பில் கொரோனா முற்பாது காப்பு வழிமுறைகள் குறித்துப் பரிசீலிக்குமாறும் கோரியுள்ளனர்.

இது பற்றிய கடிதத்தில், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர், சட்டவல்லுநர் பேராசிரியர் சாவித்திரி குணசேகர, கொழும்பு பல்கலைக்கழக சமூகக் கல்வி தொடர்பான நிபுணர் பேராசிரியர் சிறி ஹெட்டிகே, சர்வதேச சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் தினேஸ் கீர்த்திநந்த, நோபல் திட்டத்தின் தலைவர் மற்றும் முன்னாள் தேசிய கிரிக்கெட் வீரர் சிதத் வெத்தமுனி உள்ளிட்ட கல்வி மற்றும் மருத்துவத்துறையைச்சேர்ந்த நிபுணர்களும், தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 13 பேரும் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளனர்.

பாடசாலைகளைத் திறக்கும்போது, மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறைக்குச் சேவை வழங்குநர்களாகச் செயற்படுவோர் ஆகியோரின் பாதுகாப்புத் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய அடிப்படை விடயங்களை பின்பற்றுதல் வேண்டும்.

வெளிப்படைத்தன்மையுடன் சுகாதார அதிகாரிகளால், கல்வி அமைச்சு உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் மாணவர்கள் மற்றும் ஏனைய பிரஜைகளுக்கும் பாதுகாப்பான சூழல் தொடர்பில் நற்சான்றிதழ் வழங்கப்பட்டதன் பின்னரே பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் என்று கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தவிர, வைரஸ் தொற்றை இல்லாதொழிப்பது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிமுறைகள் அடங்கிய முழுமையான திட்டங்களை பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும். கொரோனாத் தொற்றை இல்லாதொழிப்பதற்கு அனுபவமிக்க பிரதிநிதிகள் கொண்ட கல்வி செயலணி ஒன்றை அமைக்க வேண்டும்.


வைரஸ் தொற்று காரணமாக பொருளாதார ரீதியில் சிக்கலை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

(கு)

# பயிர்களுக்கு நீரின்றி விவசாயிகள் பாதிப்பு

மட்டக்களப்பு, ஏப்.21

மட்டக்களப்பு வாகரை, கிருமிச்சை ஓடை நீர்பாசன திட்டத்தின் கீழ் விவசாயத்தில் ஈடுபட்டோர்களின்வேளாண்மை செய்கையில் நீர்பாச்சலின்றி பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று விவசாயி களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது;

கிருமிச்சை ஓடைக் குளத்தில் போதிய ளவுநீர்இருந்த போதிலும் நீர் விநியோகமானது உரிய நேரத்தில் வழங்காமை, சிறந்த நீர் விநியோக முகாமைத்துவம் இல்லாத காரணத்தால் பல ஏக்கர் வயல் நிலங்கள் நீரின்றி வரண்டு காண ப்படுகிறது.

இந்த நிலைமை தொட ர்ந்து நீடிக்குமானால் பயிர்ச் செய்கை யை கைவிட வேண்டிய நிலமை ஏற்படும்.

பிரதான வாய்க்காலில் நீர் குறைவாக திறக்கப்படுவதால் ஏனைய வாய்க்கால்களில் ஊடாகச் செல்லும் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. இதனால் குறித்த வாய்க்கால்களின் மூலம் நீரைப் பெற்று பயிர்ச்செய்கைபண்ணப்படும் வயல் பிரதேசம் நீரின்றி வரண்டு காணப்படுகிறது. விநியோகிக்கப்படும் நீரை பிரதான வாய்க்காலுக்கு அருகாமையில் உள்ள விவசாயி கள் போதியளவு பெற்றுள்ளனர்.

ஏனைய விவசாயிகளுக்கு குறித்த நீர் சென்றடைவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதுடன், நீர் சென்றடையவும் இல்லை. இதனால் விவசாயிகளுக்கிடையிலே முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. குறித்த காலத்தில் வழங்கப்படும் நீரே வேளாண்மையின் பருவ வளர்ச்சிக்குப் பொருத்தமனதாக இருக்கும் எனவே, இவ்விடயம் தொடர்பாக செங்கலடி நீர்பாசனத் திணைக்களம் முன்வந்து நிலைமையைச் சீர் செய்து விவசாயிகளை குறித்த ஆபத்தில் இருந்து காப்பாற்றவேண்டும் - என்றனர்.

(ப-114)

# பொதுமக்களை அரசு ஆபத்தில் தள்ளவுள்ளது?

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21

சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளைப் புறந்தள்ளி கோத்தாபய அரசு மக்களை தேர்தலுக்காக ஆபத்தில் தள்ளப்போகின்றதா என்றுகேள்வி எழுப்பியுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தேர்தலுக்காக மக்களை ஆபத்துக்குள் தள்ளிவிடாதீர்கள் என்று எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு தேர்தலை நடத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு வருகின்றது. இது மக்களுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

நடைபெறவுள்ள தேர்தல் ஜனநாயகமாக நடைபெறுமா? என்ற கேள்வி உள்ளது. தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை மக்களுக்குப் பகிர சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

நடைபெறவுள்ள தேர்தல் ஜனநாயக ரீதியாக நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்த சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். எனவே அரசு இவை தொடர்பில் ஆராய்ந்து மக்கள் நலனை முன்னிறுத்திச் செயற்பட வேண்டும்.

கோத்தாபய அரசு இரண்டு காரணிளை வைத்தே எப்படியும் தேர்தலை நடத்த வேண்டும் என்று விடாப்பிடியாக உள்ளது. அதில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிரிந்துள்ளது. அவர்களின் பிளவுகளை சாதகமாக்கி வாக்குகளை அதிகமாகப்பெற முடியும். மற்றையது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தை அரசு வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்ற பரப்புரை போன்றவற்றை கருத்திற் கொண்டே அரசு தேர்தலில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. - என்றார்.

(கு-20)

# வளங்களைப் பயன்படுத்தினால் கையேந்தும் அவசியமில்லை

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிக்கிறார்

வவுனியா, ஏப்.21

எமது மண்ணில் உள்ள வளங்களை சரியாகப் புரிந்து முறையாகப் பகிர்ந்து செயற்பட்டால் நாம் ஆட்சியாளர்களிடமோ, பிற தரப்பினர்களிடமோ தங்கி வாழும் சூழல் ஏற்படாது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோன வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமது மக்களுக்கான நலத்திட்டங்கள் அனைத்துமே கண்துடைப்பான நாடகங்களாகவே இருக்கையில் எமது மக்கள் தமது சொந்த முயற்சியில் வாழ்வியலில் மீண்டெழ ஆரம்பித்திருந்தனர்.

இந்தநிலையில், கொரோனா ஒட்டுமொத்த வாழ்க்கையையும்புரட்டிப்போட்டுள்ளது. திறந்தபொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் அரசு பின்பற்றிய இறக்குமதிகளை மட்டுமே மையப்படுத்திய பொருளாதாரத்தால் தற்போது பெரும் நெருக்கடிகள் எழுந்துள்ளன. சவால்கள் நிறைந்த காலமொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது பகுதிகளின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக 'சுயதேவை பொருளாதார' கொள்கைகளை மையப்படுத்திய திட்டங்களை உடன்பின்பற்றுவதே எமக்கும் எதிர்காலச் சந்ததியினரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

நெல் உற்பத்தி, மரக்கறி உற்பத்தி, நன்னீர், கடல் நீர் மீன்பிடி ஆகியவற்றை ஊக்குவிப்பது இன்றியமையாததாகின்றது.

அனைத்துத் தரப்பினரும் தமது வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை முன்னெடுப்பதும் அவசியம் - என்றார். (கு-110)

# தேர்தல் ஆணையாளர் மீது அரச அழுத்தம் வேண்டாம்

## சிவமோகன் வலியுறுத்து

வவுனியா, ஏப்.21

தேர்தல் ஆணையாளரின் மீது தற்போதைய அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடாது என்று கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

ஊடக செய்திகளின் அடிப்படையில் தேர்தல் ஆணையாளர் கடுமையான அரசியல் அழுத்தத்துக்கு உட்பட்டுள்ளார் என்பதை மக்கள் விளங்கிக் கொள்கின்றனர்.

வரப்போகும் இடர்களைப் புரிந்துகொண்டு தேர்தல் ஆணையாளர் அரசியல் யாப்புக் குழப்பங்கள் ஏற்படாத வகையில் உயர் நீதிமன்ற ஆலோசனை பெற்றுக் கொள்ளுமாறு அரசுக்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுதிருந்தார். அதற்கு ஜனாதிபதியின் சார்பாக பதிலளித்த செயலாளர், அரசமைப்புவியாக்கியானங்களைத் தெரிவித்து தேர்தலை நடத்துவதற்குரிய எழுத்து மூலமான பதிலை வழங்கியிருந்தார்.

நாட்டில் கொரோனா நீங்கிவிட்டதை கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கான ஜனாதிபதி செயலணி நாட்டு மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். அதுவே ஒட்டுமொத்த கொரோ னா அழிப்பு செயலணியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஜனாதிபதிக்கு பொருத்தமான செயற்பாடாக அமையும்.

தற்போதுள்ள சூழல் மிகப் பயங்கரமானது என்பதை அரசு அறிந்துகொண்டு உலக நாடுகளில் ஏற்பட்ட கொரோ னா இடர்களை விளங்கிக் கொண்டும் செயற்பட வேண்டும்.

இலங்கையில் சுகாதார சேவைகள் முடக்கப்பட்டு கொத்துக் கொத்தாக மக்கள் பலியாகும் நிலை ஏற்பட்டால் அந்த இடருக்குக் காரணம் கூறாமல் முன்னெச்ச ரிக்கையாக அரசும் தேர்தல் திணைக்களமும் நடந்துகொள்ள வேண்டும். மக்கள் 100 வீதம் சுமுகமான வாழ்க்கைக்குத் திரும்பும் வரை தேர்தலை மக்களுக்குத் திணிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

(கு)



## சமூக இடைவெளியை வலியுறுத்திய பொலிஸார்

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு நேற்றுத் தளர்த்தப்பட்ட நிலையில், சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தி பொது இடங்களில் அடையாளப் படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்யும், மக்கள் ஒரு மீற்றர் தூரம் சமூக இடைவெளியில் நிற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, கோடுகளை வரைந்தனர்.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் வலியுறுத்தினர். (க-7)

# அரசியல்வாதியின் செயற்பாடு அப்பட்டமான தேர்தல் விதி மீறல்

## கூட்டமைப்பின் பேச்சாளர் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குக் கிடைத்த பொருளை அரசியல் கட்சிக்கு வழங்கியமை அப்பட்டமான தேர்தல் விதி மீறல். நாகரிகமற்ற செயல். இதற்கு நிர்வாக ரீதியில் கண்டிப்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் இத்தகைய செயற்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது பற்றி உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு எழுத்தில் முறையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் இடம்பெறும் நடவடிக்கைகளுக்கு மாவட்டச் செயலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையில் அதிக அவதானம் தேவை என்பதனை அதிகாரிகள் புரிந்திருக்க வேண்டும். இது தொடர்பில் மாவட்டச் செயலகத்திலேயே முறைகேடாக ஓர் அரசியல் கட்சிக்கு சார்பாக செயல்பட்டமை அப்பட்டமான விதிமுறை மீறல். எனவே தேர்தல் காலத்திலும் இவர்களிடம் இந்த அரசியல்வாதிகள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் நீதியான விசாரணை இடம்பெறுமா என்ற நிலைமை தற்போது தொடர்வதாக செய்திகள் வருகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்றார். (து-105)

# உள்நோக்கோடு தீர்மானம் எடுத்தால் அனைத்தும் பாழ்

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்.21**

**தற்போதைய சூழ்நிலையில் கொள்கை வகுப்பாளர்களால் அவசரமாகவும், உள்நோக்கங்களுடனும் ஏதேனும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இத்தனை நாள்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சுகாதாரத்துறை ஊழியர்கள், பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட ஒட்டுமொத்த நாட்டுமக்களினதும் உழைப்பு அர்த்தமற்றதாகிவிடும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதைய சூழ்நிலையில் அவசரமாகவும், உள்நோக்கங்களுடனும் ஏதேனும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இத்தனை நாள்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சுகாதாரத்துறை ஊழியர்கள், பாதுகாப்புப் பிரிவினர், வர்த்தகர்கள் மற்றும் ஒட்டுமொத்த நாட்டுமக்களினதும் உழைப்பு அர்த்தமற்றதாகிவிடும்.

எனவே இப்போது கொள்கை வகுப்பாளர்களும், பொதுமக்களும் உயர் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும். அதுமாத்திரமன்றி ஊரடங்கு தளர்த்தப்பட்டு நாடு படிப்படியாகத் திறக்கப்படும் பட்சத்தில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பது மக்களின் பொறுப்பாகும். எனவே சுகாதார அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றிச் செயற்பட வேண்டும் என்றார். (ப)

# உணவளித்தவர்ளுக்கு நன்றி விடைபெற்ற தொழிலாளர்கள்



யா்ழ்ப்பாணம், ஏப்.21

ஊரடங்கால் அகப்பட்டு, உணவின்றி இருக்கும் போது, அரவணைத்து உணவளித்தவர்களுக்கு தமது சொந்த இடத்துக்கு திரும்பும் போது நன்றி கூறிச் சென்றனர் கட்டடத் தொழிலாளர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பாடசாலை ஒன்றின் கட்டட வேலைத் தொழில் நிமித்தம் இளவாலை வந்திருந்த தொழிலாளர்கள் கடந்த நாள்களில் ஏற்பட்டிருந்த ஊரடங்கால் மீண்டும் தமது ஊர்களுக்குச் செல்ல முடியாமல் இளவாலையிலேயே தங்கவேண்டி ஏற்பட்டது! கடந்த நாள்களில் தினம் தோறும் அவர்களுக்கான மதிய உணவு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று ஊரடங்கு தளர்வினால் மீண்டும் தமது சொந்த இடமான மட்டகளப்பு நோக்கி மாவட்டச் செயலரின் விசேட அனுமதியுடன் புறப்பட்டனர். இதன்போது இதுவரை தமக்கு உணவளித்த இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்துக்கு அவர்கள் நன்றிகூறிச் சென்றனர். (ப-222)

## பொதுமக்களுக்கு அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப்.21

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களில் இருந்து வருகை தந்து தமது வதிவிடங்களுக்குச் செல்ல முடியாமல் உள்ள தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொதுமக்களுக்கான அறிவித்தல் ஒன்று பிரதேச செயலரால் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மக்கள் நேற்று பிற்பகல் 2 மணிக்கு பின்னர் கிராம அலுவலரின்-சிபாரிசுடனான பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல் மற்றும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரியின் சிபாரிசுடன் தமது வதிவிடங்களுக்குச் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

## கொரோனா பாதிப்பு கொழும்பில் 101

கொழும்பு, ஏப். 21

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 101ஆக அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சு நேற்று மதியம் ஒரு மணிக்கு வெளியிட்ட அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 45 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 32 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 பேரும், கண்டி மாவட்டத்தில் 07 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 05 பேரும், கேகாலை மாவட்டத்தில் 03 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், குருநாகல், மாத்தறை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு, பதுளை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 10 மாவட்டங்களில் இன்னும் எவரும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை.

இதனிடையே தனிமைப்படுத்தும் நிலையங்களில் இருந்து 38 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகள் 03 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் இன்று பிற்பகல் ஒரு மணிவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 295 ஆகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-22)

# நினைவின் நனைதலில்...



# ஈஸ்டர் தினத்தன்றில் இறந்தது இலங்கை!!



ஆர்.பிரகாஷ்

அந்தக் கோரத்தாண்டவம் இடம்பெற்று இன்றுடன் சரியாக ஓராண்டு ஓடி மறைகின்றது. கடந்த வருடம் இதே நாளில் உலகக் கத்தோலிக்கர்கள் கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவான ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். இலங்கை வாழ் கிறிஸ்தவர்களும் இதில் விதி விலக்கல்லர். இலங்கையின் தலைநகர் கொழும்பு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில் நூற்றுக் கணக்கான மக்கள் துடிதுடித்து இறந்தனர். உலக வரலாற்றின் கறுப்புப் பக்கங்களில் பதிவாகியுள்ள இந்தக் கொடூரத் தாக்குதலால் இலங்கை நிலைகுலைந்தது பேரவலம் கொண்டது.

உலகில் உள்ள ஆகக்கொடிய தீவிரவாத அமைப்பான ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் (ஐ.எஸ்.ஐ.எஸ்) அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி, இந்தத் தாக்குதல்களுக்குத் தாமே பொறுப்பு என்று அறிவிப்புச் செய்தார். அந்தக் கொடூர தாக்குதலால் உளம் மகிழ்ந்த அந்தக் கயவன் இன்று உயிருடன் இல்லை. அமெரிக்காவின் வேட்டையில் ஒரு நாயைப் போல அவர் கொல்லப்பட்டார். எந்த அடையாளமும் இல்லாமல் அவர் அழிக்கப்பட்டார் என்பது வேறு கதை.

**அரசியல் ஆசாமிகள்**


ஈஸ்டர் தாக்குதலால் இலங்கைத்தாயின் உடல்கள் சல்லடையாக்கப்பட்டு உதிரம் கரை புரண்டு ஓடியபோதிலும், வழக்கமான பேரினவாத அரசியல் பேசும் ஆசாமிகள் தமது லீலைகளைத் தொடர்ந்தனர். இந்தத் தாக்குதலின் முக்கிய சூத்திரவாதியான சக்ரானை விடவும் மோசமான பழிச்செயல்களை அவர்கள் செய்தனர். சிலர் ஹிஸ்புல்லா என்றனர். இன்னும் சிலர் ரிசாத் என்றனர். இன்னும் சிலர் வெள;வேறு நபர்களை நோக்கி கைகாட்டினர். எனினும் இன்றளவும் உண்மைக் குற்றவாளி யார்? இதன் சூத்திரதாரி யார்? என்று அறியப்படவேயில்லை.

இது தொடர்பான விசாரணைகளுக்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டனவா? அந்தக் குழுக்களின் அறிக்கைகள் செயல் வடிவம் பெற்றுள்ளனவா? என்று கேட்டால் இல்லை என்பதே பதில். மஹிந்த இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. கோத்தாபய இருந்திருந்தால் இவ்வாறு நடத்திருக்காது என்று வீராப்புக்கள் பேசப்பட்டனவே தவிர வேறு எந்தக் காத்திரமான நகர்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை. முன்னெடுக்கப்பட்டதெல்லாம் மருத்துவர் ஷாபி, அப்பாவி இளைஞர்கள், அப்பாவிப் பெண்கள் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டமையே.

**இன்று கொரோனா!**

கடந்த வருட ஈஸ்டர் எவ்வாறு பேரவலம் கொண்டதாக அமைந்ததோ, அதேபோல இந்த வருட ஈஸ்டர் பண்டிகையும் கொரோனா என்னும் கொடும் அரக்கனின் பிடிக்குள் சிக்கி பேரவலம் கொண்டதாக அமைந்தது. கடந்த வருடம் இறந்த எம் அன்புக்குரிய உறவுகளுக்கு இணைந்து நின்று அஞ்சலி செலுத்தக்கூட இயலாதவர்களாக நாம் இன்று ஆக்கப்பட்டுள்ளோம். எனினும் மதத் தலைவர்களின் கோரிக்கைக்கு அமைய வீடுகளில் இருந்தவாறே எம் இனிய உறவுகளை அஞ்சலிப்போம். அடுத்த வருடமாவது இலங்கைத் தீவுக்கு மீட்சி கிட்டும் என்று நம்புவோம்.





# பிரதான வீதிகளில் பொருள்கள் விற்பனை

கொடிகாமம்,ஏப்.21

யாழ் மாவட்டத்தில் நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதும், கொடிகாமம் சந்தைப் பகுதி திறக்கப்படவில்லை. அதனால் வியாபாரிகள் பிரதான வீதிகளில் பொருள்களை வைத்து விற்பனையில் ஈடுபட்டனர்.

ஒரு சில வியாபாரிகள் மரக்கறிகளை ரயில் நிலையத்துக்கு முன்பாகவும், கச்சாய் வீதியிலும், நடமாடும் சேவையாக வாகனத்திலும் பொருள்களை விற்பனை செய்தனர். (க-159)

# கொரோனாவை கட்டுப்படுத்தாமல் தேர்தல் நடத்தப்படவே மாட்டாது

*உதய கம்மன்பில உறுதி*



**கொழும்பு, ஏப்.21**

**கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தாமல் பொதுத்தேர்தலை அரசு ஒருபோதும் நடத்தாது. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தாமல் அரசு அரசியல் நோக்கங்களை இலக்காகக் கொண்டு பொதுத் தேர்தலை நடத்த முயற்சிப்பதாக எதிர் தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றார்கள். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் அரசு ஒருபோதும் பொதுத்தேர்தலை நடத்தாது என்பதை உறுதியாகக் குறிப்பிடவேண்டும். ஜனாதிபதி நிர்ணயித்த திகதியில் பொதுத்தேர்தலை நடத்த முடியாமல் போயுள்ளது. தேர்தலைப் பிற்போடும் போது தேர்தல் ஆணையாளர் தேர்தல் நடத்தும் திகதியை அறிவித்திருக்க வேண்டும். ஒரு சில விடயங்கள் இன்று பலதரப்பட்ட சட்ட சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அனைத்தும் சட்ட ரீதியாக தீர்வு காணப்படும். மக்களின் தேவைகளை கருத்திற் கொண்டு அரசு செயற்படுகின்றது. கொரோனா வைரஸை கட்டுப்படுத்தாமல் பொதுத் தேர்தல் ஒருபோதும் இடம் பெறாது என்றார்.

(ப)

# அடிப்படை வாதிகளிடமிருந்து மீண்டது ஐக்கிய தேசிய கட்சி

*ரவி கருணாநாயக்க தெரிவிப்பு*



கொழும்பு, ஏப்.21

கடந்த காலங்களில் அடிப்படைவாதிகள் சிலரின் வலையில் சிக்கித் தவித்த ஐக்கிய தேசியக் கட்சி இப்போது அவர்களிடமிருந்து மீண்டுள்ளது. அடிப்படைவாதிகள் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக சிக்கல்களை எதிர்கொண்டிருக்கும் மக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவர்களுக்கான நலன்களைப் பெற்றுக்கொடுக்குமாறும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியானது சிங்கள. தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து இனத்தவர்களும் தங்களது கட்சியென கூறிக்கொள்ளும் அளவில் காணப்பட்டது. கடந்த காலங்களில் அடிப்படைவாதிகள் சிலரின் வலையில் ஐ.தே.க சிக்கிக் கொண்டிருந்தது. இந்நிலையில் தற்போது அந்த அடிப்படை வாதிகள் ஐ.தே.க.விடமிருந்து பிரிந்து சென்றுள்ளனர். இதனால் மீண்டும் அனைத்து இனத்தவரும் ஐ.தே.க.வுடன் இணைந்து செயற்பட முடியும்.

கொவிட் - 19 வைரஸ் பரவலின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையால் சிக்கல்களை எதிர்நோக்கி வரும் சாதாரண மக்களுக்கான நலன்களை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும். இதேவேளை வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டு வரும் அரச மருத்துவப் பிரிவு மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கு முதல் மரியாதையை தெரிவிப்பதுடன், வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதும் கைவிட முடியாத பொறுப்பாகும். வைரஸ் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சாதாரண மக்களுக்கு அரசாங்கம் நலன்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அறிவித்துள்ளது. அதற்கமைய 5000 ரூபாய் பணத்தை வழங்குவதாக தெரிவித்துள்ளது. இந்த நிதிக்கான அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் அனைவரையும் தெளிவுப்படுத்த வேண்டும். இதேவேளை இதற்காக அரசால் விதிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட வேண்டும்.

கிராம அலுவலர்கள் ஊடாகவே இந்தப் பணத்தைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கமைய இதற்கான முறைகளை அரச அதிகாரிகளே செயற்படுத்த வேண்டும். இவ்வாறு நிதி வழங்கப்படும் நபர்கள் தொடர்பான தகவல்களை இணையத்தில் பதிவுசெய்து கொள்ள வேண்டும். வெளிநாட்டில் தொழில் புரிவதற்காகச் செல்லும் தொழிலாளர்களிடமிருந்து காப்புறுதி உள்ளிட்ட ஆரம்பக்கட்டச் செயற்பாடுகளுக்காக அரசாங்கம் 25 ஆயிரம் ரூபாய் நிதியை அறவிட்டு வருவதுடன், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை 3ஆயிரத்து 200 ரூபா நிதியையும் அறவிட்டு வருகின்றது. இந்த நெருக்கடியான நிலையில் அந்த நிதியின் ஊடாக அவர்களுக்கான கொடுப்பனவுபெற்றுக் கொடுக்கப்படவேண்டும் - என்றார். (ப)

# என்னைத் திட்டுவதை கைவிட்டு பரிசோதனையை அதிகரியுங்கள்

*அரசுக்கு மனோ வலியுறுத்தல்*

கொழும்பு, ஏப்.21

நாட்டை முழுமையாகத் திறந்து, இயல்பு நிலைமை திரும்பி விட்டது எனக்காட்ட முன், என்னைத் திட்டித் தீர்க்காமல் முதல் தொடர்பாளர்களை கண்டறிந்து சோதனை செய்து முடியுங்கள். இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்

இது தொடர்பில் தனது அதிகார பூர்வ முகநூல் பக்கத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது;

இந்த 'முதல் தொடர்பாளர்' 40ஆயிரம் பேரையும் பரிசோதியுங்கள் என்று ஊடக மாநாட்டில் நான் கூறியதை பிடித்துக் கொண்டு, நான் அரசை தர்மசங்கடத்துக்குள்ளாக்க பொய்த் தகவல் தந்ததாக என் கருத்தைத் திரித்து கூறினார்கள். அமைச்சர்கள் எஸ்பி திசாநாயக்க, முன்னாள் எம்பி கம்மன்பில, இன்னும் பல அரசின் அமைச்சர்கள் உள்ளிட்ட கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துகளை வெளியிட்டுவரும் டேன் பிரியசாத் என்ற சிங்களே தேசிய இயக்கத்தை நடத்தி வரும் நபர் உட்பட பலர் என்னைப்பற்றி கேவலமாகப் பேசினார்கள்.

முதல் தொடர்பாளர் என்ற இப்படியானோர், சுமார் 40ஆயிரம் பேர் இருப்பதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கட்சித் தலைவர் கூட்டத்தில் சொன்னதைதான் நான் சொன்னேன் என்று நேற்று விசேட ஊடக மாநாட்டில் நான் சிங்களத்தில் உரக்கச் சொன்னதும், இவர்கள் கப்சிப் ஆகி விட்டார்கள். பெரிய இடத்தில், இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு நல்ல வரவேற்பு கிடைத்ததோ, என்னவோ! போதாதற்கு அவர் பாடசாலை, பல்கலைக்கழக திறப்புகளுக்கு எதிராகவும் பேசியுள்ளார் இந்த நிலையில், இன்று (நேற்று) கொழும்பில் சோதனையின் போது ஒரே நாளில், ஒரே இடத்தில் 24 பேர் அகப்பட்டவுடன், என்னை திட்டிய நபர்கள் இப்போது இஞ்சி தின்ற குரங்குகளைப் போல் முழிசிக்கொண்டு இருக்கிறார்கள். மீண்டும் ஊரடங்கை நீடித்துள்ளார்கள் - என்றுள்ளது. (ப)

# தனியார் பேருந்து சேவையிலில்லை

மன்னார், ஏப் 21

மன்னார் மாவட்டத்தில் கொரோனா ஊரடங்கு சட்டம் நேற்றுக் காலை 5 மணிமுதல் தளர்த்தப்பட்டிருந்த நிலையில் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அரச மற்றும் தனியார் நிர்வாகங்களும் இயங்க ஆரம்பித்திருந்தன. அந்த வகையில் மன்னார் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், அரச பேருந்துச் சேவைகள், முச்சக்கர வண்டிகள், வாடகைச் சிற்றூர்திகள் என அனைத்தும் இயங்கிய போதும் மன்னார் மாவட்ட தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை அரச பேருந்துகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு பயணிகளை ஏற்றிச் சென்றதால் பொது மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர் கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மன்னார் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாதது பற்றி தனியார் சங்கத் தலைவரிடம் கேட்டபோது "தனியார் பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தனியார் பேருந்து அதிகார சபையிடம் இருந்து இன்னமும் உத்தியோக பூர்வமான அறிவித்தல் கிடைக்கவில்லை - என்றார்.

(ஜ-213)

**ஒரே...**

இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியில் கடந்த 5 நாள்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சுமார் 59 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியைச் சேர்ந்த 59 வயதான குடும்பப் பெண் கடந்த 15ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அவர் கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி தனது, கணவர் மற்றும் மூத்த புதல்வருடன் தம்பதிவ யாத்திரைக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். மார்ச் மாதம் 12ஆம் திகதி இந்தியாவிலிருந்து நாடு திரும்பியிருந்த அவர், பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 15ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சுகவீனமுற்ற நிலையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது அன்றே உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அவரின் வீடு அமைந்துள்ள வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியிலுள்ள 58 வீடுகள் தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டன. அந்தப் பகுதியைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

பெண்ணுடன் தம்பதிவ யாத்திரைச் சென்று வந்திருந்த அவரது கணவர் மற்றும் மூத்த புதல்வர் மற்றும் வீட்டிலிருந்த இளைய புதல்வருக்குக் கொரோனா தொற்றுள்ளமை பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை கொரோனா வைரஸ் ஏற்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்ட 10 பேரில் 6 பேர், தம்பதிவ யாத்திரைச் சென்று திரும்பிய பெண்ணின் வீட்டுக்கு முன்பு உள்ள வீட்டிலுள்ள 2 பேர், அந்த வீட்டுக்கு அடுத்துள்ள வீட்டைச் சேர்ந்த 2 பேர், அவ்வீட்டுக்கு அண்மையிலுள்ள இரு மாடிகளைக் கொண்ட வீட்டிலுள்ள இரு குடும்பங்களைச் சேர்ந்த 2 பேர் என அறிவிக்கப்பட்டது.

பின்னர் வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் அவரின் வீட்டுக்கு அருகில் வசித்தவர்கள் என மேலும் 17 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தபட்டிருந்த நிலையில் தொற்றுடன் இனங்காணப்பட்டனர்.

அவர்களுடன் தொடர்புடைய 200க்கும் மேற்பட்டவர்கள் கொழும்பிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு அங்கு நடத்தப்பட்ட சோதனையில் 32 பேருக்குத் தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-22)

**கொழும்பில்...**

மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு, வாழைத்தோட்டம் பண்டாரநாயக்க வீதி, கிராண்ட்பாஸ் நாகலகம் வீதி, தெஹிவளை அருணோலோக வீதி, மருதானை ஆர்னோல்ட் ரத்நாயக்க வீதி, குணசிங்கபுர, மிஹிது வீதி ஆகிய பகுதிகளே பலத்த கண்காண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுளன்ன.

அந்தப் பகுதிகளில் உள்ள பல குடும்பங்கள் கொரோனா கண்காணிப்பு மையங்களுக்கு அனுப்பட்டுள்ளனர் என்றும், ஏனையோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (எ-22)

**கொரோனா...**

இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதி நெருக்கமான பகுதி. அதனால்தான் அங்கு அதிகமானோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்

அந்தப்பகுதி அதிதீவிர கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டு முடக்கப்பட்டுள்ளது. எவரும் வெளியேயும் உள்ளேயும் செல்ல முடியாது- என்றார். (து-22)

**சட்டமா...**

களை செய்து அரச சட்டவாதிகளின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் (நிர்வாகம்) ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தன , நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (ஐ)

## விதிகளை மீறினால் சட்ட நடவடிக்கை

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களில் சேவையில் ஈடுபட்டு வரும் பஸ்களில், சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாது, பயணி களை ஏற்றிச்செல்லும் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று , போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (க)

# கட்டுநாயக்க அதிவேக வீதி திறக்கப்படாது

கொழும்பு,ஏப்.21

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதி நாளை திறக்கப்படமாட்டாது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அதுலுவகே தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் திகதி நீடிக்கப்பட்டுள்ளதால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஏற்கெனவே அறிவிக்கப்படி, தெற்கு அதிவேக வீதியில் கொட்டாவ - அம்பாந்தோட்டை வரையான பகுதி தினமும் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வீதியை, ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரம் வைத்திருப்போரும், அத்தியாவசிய சேவைகளுக்குச் செல்வோரும் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தாபனக் கிளையில் அலுவலக உதவியாளராக கடமையாற்றும் **திரு.மு.மகேந்திரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் மாதன் மூத்தன்**

அவர்கள் கடந்த 18.04.2020 (சனிக்கிழமை) இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 05 . 02 . 1940



**மறைவு** 20 . 04 . 2020

**திருமதி பரமேஸ்வரி சேனாதிராஜா**

இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சேனாதிராசா நேற்று (20.04.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துறை பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சேனாதிராஜாவின் அன்பு மனைவியும், சறோஜினிதேவி, மாலினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசிங்கம், சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜன்-துவாரகா, மதுஜா, சிந்துஜவதனா, மிதுலன், ஜெதுசன், ஜெஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.04.2020) வியாழக்கிழமை காலை 7.00 மணியிலிருந்து 9 வரை சுவிஸ் (சூரிஷ்) ல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 05 - 07 - 1947



**இறப்பு** 20 - 04 - 2020

**அமரர்**
**காஞ்சனாதேவி துரைசிங்கம்**

**யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதி, பாணாங்குளத்தை சேர்ந்த துரைசிங்கம் காஞ்சனாதேவி நேற்று திங்கட்கிழமை காலமானார்.**

**அன்னார் அமரர்கள் வேலுப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதிகளின் மகளும், சி.துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், ரஞ்சிதாதேவி, அற்புதாதேவி ஆகியோரின் சகோதரியும், ஆதவன் (ஜேர்மன்), வாகீசன் (ஆசிரியர், யாழ் பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தயாராருமாவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.**

**260/1, கச்சேரி - நல்லூர் வீதி,**
**பாணாங்குளம்,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்**
**மகள் வாகீசன்**
**(0779134524)**

# மாணவர் கற்கைக்கு ரி.வி. சேவை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 21

**இலங்கை அனைத்து பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் 'குரு கெதர' புதிய தொலைக்காட்சி அலைவரிசை நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



இலங்கை ரூபவாஹினி கூட்டுதாபனத்தின் ஊடக பங்களிப்புடன் கற்றல் நடவடிக்கைகளில் மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.

இதன்படி காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரைக்கும், இரவு 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை கற்றல் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியும்.

இதன்பிரகாரம் உயர்தர கலை பிரிவுக்கு தமிழ்,சிங்களம், அரசியல் விஞ்ஞானம், புவியியல் ஆகிய விடயதானங்களும் வணிக பிரிவுக்கு பொருளாதார விஞ்ஞானம், வணிக கல்வி, கணக்கியல் ஆகிய பாடங்களும் கணித மற்றும் விஞ்ஞான பிரிவுகளுக்கான பாடங்களும் கற்பிக்கப்படும்.

அத்துடன் சாதாரண தர மாணவர்களுக்காக கணிதம், விஞ்ஞானம், தமிழ், சிங்களம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும். அனைத்து பாடங்களும் தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலமான கற்பித்தல் நடவடிக்கை இடம்பெறும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் கலந்துரையாடல்களும் இடம்பெறும் என்று கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(கு)

# முதலையிடம் சிக்கியவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு,ஏப்.21

மண்முனை ஆற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர், முதலைக்கடிக்கு இலக்காகியுள்ளார். அவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு ஆரையம்பதி, இராஜதுரைக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் நேற்று முன்தினம் காணாமல் போயிருந்தார். அவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலை அடுத்து தோணிகளைப் பயன்படுத்தி ஆற்றில் தேடுதல் நடத்தப்பட்டது.

எனினும் மண்முனை ஆற்றங்கரையில் சடலம் கையொதுங்கியது.

கரையொதுங்கிய இளைஞனின் உடலில் முதலை கடித்தகாயங்கள்இருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

(க-114)

**வாடகைக்கு**

கொக்குவில் சந்தியில் K.K.S. வீதியில் வீடு, கடை, அறை வாடகைக்குண்டு.

**071 814 1506** 2.00 P.M - 6.00 P.M

## கிராம அலுவலர் மீது தாக்கு;

# மட்டு. நகர கிராம அலுவலர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பு

மட்டக்களப்பு, ஏப்.21

ஓட்டமாவடிப் பிரதேச செயலக பிரிவின் காகித நகர் கிராம அலுவலர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர்களும் நேற்று மதியம் தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

காகிதநகர் கிராம அலுவலர் பிரிவில், அந்தப் பிரிவு கிராம அலுவலர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து ஏப்ரல் மாதத்துக்கான சமுர்த்திக் கொடுப்பனவையும், அதனுடன் இணைந்த உலர் உணவுப் பொதிகளையும் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைத்தனர். அவ்விடத்தில் நின்ற நபர் ஒருவர் அங்கு நின்ற மக்களை ஒளிப்படம் எடுத்துள்ளார். இது தொடர்பில் கிராம அலுவலருக்கு மக்கள் முறையிட்டுள்ளனர். இதன் பிரகாரம் கிராம அலுவலர் காவத்தமுனையைச் சேர்ந்த குறி த்த நபரை ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று கூறியுள்ளார். இதன் போது குறித்த நபர் கிராம அலுவலரைத் தள்ளிவீழ்த்தியதில் அவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. இதனைக் கண்டித்தும், தாக்குதல் மேற்கொண்டவரை கைது செய்யுமாறு வலியுறுத்தியுமே இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை பாதிக்கப்பட்ட கிராம அலுவலர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ப-150)

# வீட்டுக் கழிவுகளை தரம் பிரிக்க ஏற்பாடு

மன்னார்,ஏப்.21

மன்னார் நகர சபைக்குட்பட்ட வீடுகளில் திண்மக் கழிவுகளைப் பிரித்து வழங்குவதற்கான வாளிகள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபை உறுப்பினர்களுக்கு வாளிகளை வழங்கினார். மன்னார் நகரசபைப் பிரிவில் உள்ள மக்கள் ஆயிரம் ரூபா பணம் செலுத்தி, மன்னார் நகர சபையின் இரண்டு நிற வாளிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு நிற வாளியில் உக்காத கழிவுப் பொருள்களையும், மற்றைய நிற வாளியில் உக்கக்கூடிய கழிவுப் பொருள்களையும் சேமிக்க முடியும். மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் திண்மக்கழிவுப் பொருள்களை வீடுகளில் பெற்றுக்கொள்ள வருகின்றபோது, தரம் பிரித்தே வழங்க வேண்டும் என்று மன்னார் நகர சபையின் தலைவர் தெரிவித்தார்.

(க-56)

கலாபூஷணம், சிவானந்த வாரிதி, வாரியார் வாரிசு
அருள்ஞான வித்தகர் சிவத்திரு
**வ.குமாரசாமி ஐயா**
அவர்களை
**அகவை 75 பவள விழாவில்**
உளம் உவந்து வாழ்த்துகின்றோம்

Best Wishes




Best Wishes

இந்து சமய வாழ்வில் அரும்பெரும் பணியாற்றி மானிட வாழ்வில் மகத்தான சேவையை மானசீகமாய் எமக்கு உணர்த்தி தாயாய், தந்தையாய், நல்லாசானாய் நல்லறிவு பல தந்து, தீமை இளைப்பவர்களுக்குக் கூட நன்மையே செய்யவும், ஏழ்மையிலும் நேர்மையாய் இருக்கவும், வறுமையிலும் பரோபகாரம் செய்யவும், அன்பே சிவம் என எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தவும் இறை இன்பமே பேரின்பமென இறை இன்பத்தோடு எம் வாழ்வு தொடரவும் எமக்கு நல்வழிகாட்டி எம் வாழ்வை மலரச் செய்து கடந்த (23.03.2020) திங்கட்கிழமை அன்று அகவை 75 இல் காலடிபதித்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு சிவத்திரு வ.குமாரசாமி ஐயா அவர்களை இன்னும் பல ஆண்டுகள் எம்மோடு உடல், உள சுகத்துடன் வாழ்ந்து எமக்கும் சைவ உலகத்துக்கும் ஆறுதல் தரவேண்டுமென எல்லா வல்ல பரம்பொருளாம் குருநாதனையும் செல்வச்சந்நிதி வேலனையும் ஏழாலை களவாவோடை ஸ்ரீ வசந்தநாகபூசணி அம்பாளையும் அகமுருகிப் பிரார்த்தித்து அவர்தாள் பணிந்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

"அருள் பவனம்"
சூராவத்தை, சுன்னாகம்.

சகோதரன், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனி,
மருமக்கள், பெறாமக்கள்.

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்




முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் இந்து மத குருக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-19)



கொரோனா தொற்றுக் காணமாக நாளாந்த வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 65 குடும்பங்களுக்கு ரெலோ அமைப்பினரால் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் நிரோஷ் மற்றும் துணை அமைப்பாளர் து.ஈசன் ஆகியோர் இந்த உதவிப் பொருட்களை வழங்கினர். (ம)



தென்மராட்சிப் பிரதேசத்தின் மீசாலை வடக்கு, மீசாலை மேற்கு மற்றும் இராமாவில் கிராம சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு அண்மையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. பட்டானிச்சூர் பள்ளிவாசலில் 1,700 பேருக்கு இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-110)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 1998ஆம் ஆண்டு வர்த்தகபீட மாணவர் க.குகதாசனின் நிதி உதவியில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஜே321 மீசாலை வடக்கு கிராமசேவை பிரிவில் தெரிவுசெய்யபட்ட 25 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-159)



வரணிப் பிரதேசத்தில் உள்ள எட்டு கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும், பொருளாதாரத்தில் பின்தங்கிய 48 குடும்பங்களுக்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள வரணிப் பிரதேச உறவுகளால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-9)




கோண்டாவில் கிழக்கு சிறி அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தினூடாக சுமார் 1,000 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. நல்லூர், கோப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, வேலணை ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கே மேற்படி உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கொரோனா தொற்றுக் காரணமாக நாளாந்த தொழிலை இழந்த 210 குடும்பங்களுக்கு சுன்னாகம் ஐயனார் ஆலய பிரான்ஸ் ஒன்றியம் ஊடாக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அமரர் கலாதேவி ஞாபகார்த்தமாக பிரித்தானியாவில் வசிக்கும் செல்வி ஆர்த்தி சுதன் மற்றும் சுவிஸ் நாட்டில் வசிக்கும் திருமதி விஜி கைலைநாதன் ஆகியோரின் நிதி உதவியிலேயே இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-159)

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்



## செல்வி
## அருளானந்தம் இராதா

(முன்னாள் சிரேஸ்ட தாதிய போதனாசிரியர்.
யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்.போதனா வைத்தியசாலை)

**2020.03.30**



அன்னை மடியினிலே சித்திரை மாத முழுநிலாவில்
முத்தாக பிறந்து வெளிச்ச நிலாவாக வளர்ந்த எம்
இனையறா செல்வச்சகோதரியே
எங்கள் குடும்பத்திற்கு அருமையான
சோதரியாய் கிடைத்த வெளிச்ச வைரமே
கல்வியில் சிறந்து எம்மை பெருமிதமாக்கினாய்
இளமையில் சேர்த்த பெருமைகளால்
நற்புகழ் உமை நாடி வந்தனவே.
பள்ளிகள், பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகமென
கால் பதித்த இடம் எல்லாம் தடம் பதித்து
உயர்ந்து நின்றீரே. விளையாட்டையும்
விஞ்ஞானத்தையும் அலங்கரித்த கோலம்
எங்கள் நெஞ்சம் மறந்திடுமா?
உமது சேவையால் பூரித்தவர் பலருண்டு.
புடம் போட்டு தாதியத்தைப் புகட்டிய எங்கள்
அருமை செல்வமே. எங்களுக்கும் நீர்
தாதியாய் இருந்த தருணங்கள் அத்தனையும்
மறவோம் அம்மா. உமது அமைதியான அழகு,
கனிவான பேச்சு, நடையில் நளினமான கம்பீரம்,
சேவையில் காட்டிய அர்ப்பணம் எல்லாவற்றிலும்
உமது கம்பீரம் முத்திரை பதித்து இருக்கையில்
ஷஷ்டி திதியில் அமைதியாக இறைவனடிடம்
சேர்ந்தீர் அம்மா.....

இராதா அம்மா உமைப்பிரிந்து வாடுகின்றோம்.
சிவபதியில் இன்பம் பெற இறைவனை
நெஞ்சார இறைஞ்சுகின்றோம்,
அன்பு நிறை செல்வமே....

**அன்னை மடியில்
பூவாக
1956.04. 25**

**ஆண்டவன் அடியில்
புகழாக
2014.04.05**

**திதி:வளர்பிறை
ஷஷ்டி**

### தங்கை இராதா!

ஆண்டு ஆறு எமை விட்டு நீர் மறைந்தாலும்
இன்றும் எம்முடன் வாழ்கின்றீர், வந்து போகின்றீர்,
ஈர விழிகள் உமைதேட கனவுலகில் வருகின்றீர்,
ஈரேழு ஜென்மங்கள் கடந்தாலும்
உமது அன்பு நினைவுகள் எம்மை விட்டு அகலாது
நிலைத்து நிற்கும் எங்கள் கடைக்குட்டி ராதா செல்வமே
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

அன்பான ராதா செல்வமே ஆறாம் ஆண்டு
நினைவலைகலையும், உமது பிறந்த தின
நினைவலைகளையும் ஒன்றாகவே
இன்று நாம் விழிநீர் சிவப்பாக சொரிய
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

**சகோதரிகள்:
அக்கா : தேவி    தங்கை : ரதி
பெறாமகன் : ஷரிகரன்
பேரன் : லோஷீசன்**

**தேவாலய வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.**



கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தின் ஏற்பாட்டில் இலங்கை துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் யாழ். கிளையின் நிதிப் பங்களிப்பில் தொடர் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட 33 குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ம)





வவுனியாவில் அன்றாட வாழ்வாதாரத்தை இழந்த 100 குடும்பங்களுக்கு வவுனியா குகன் மோட்டர்ஸ் மற்றும் சில்வா அன்கோ என்பவற்றின் பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-18)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆசிரியர்களின் நிதிப்பங்களிப்பில் பாடசாலையில் கல்விகற்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 130 மாணவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ரு)



ஊடரங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள திருகோணமலை வாழ் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட ஒலுமடு கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் நிதிப் பங்களிப்பில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-500)



ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள பல்லவராயன்கட்டு மக்களுக்கு, பல்வராயன்கட்டு சிவயோக சித்திவிநாயகர் ஆலய பிரதம குருவாகிய சி.மகேந்திரகுருக்கள் உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (ம-222)





கொரோனா தொற்றினை தொடர்ந்து நாடுபூராகவும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள அக்கினி சமூக மேம்பாட்டு மன்றம் மற்றும் பீ.என்.ஏ பறவைகள் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து உலர் உணவுப் பொதிகளை வழங்கின. (ம-150)



கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட ஜே/85 வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்களுக்கு ஜேர்மனியைச் சேர்ந்த தமிழ் மன்றம் பிறைபேர்க் அமைப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-ஐ)



செரண்டிப் சிறுவர் இல்லத்தால் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலும் உதயநகர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலும் வசிக்கும் 75 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-159)

# வுகானின் ஆய்வகத்தில் உருவானது கொரோனா

## நோபல் விஞ்ஞானியும் சொல்கின்றார்



பரிஸ்,ஏப். 21

**வௌவ்வால்களில் இருந்து கொரோனா பரவியது என்பது பொய். வுகான் நகர ஆய்வுகூடங்களில் இருந்துதான் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டது. எச்.ஐ.வி தொற்றுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பையில் கொரோனா வைரஸ் ஆய்வகத்தில் இருந்து வெளியில் கசிந்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளார் பிரான்ஸின் நோபல் பரிசு வென்ற விஞ்ஞானி லூக் தெரிவித்தார்.**

கொரோனா வைரஸ் வௌவால்களால் பரவியதாக எந்தத் தடயமும் இல்லை. சீனா சொல்லும் அந்த இடத்தில் கொரோனாவைப் பரப்பியதாகச் சொல்லப்படும் வௌவ்வால்களே இல்லை. சீனா மீது சந்தேகம் கொள்கின்றேன். சீனா இந்த வைரஸைப் பரப்பியிருந்தால் கடும் விளைவைச் சந்திக்கும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முன்னதாக எச்சரித்திருந்தார். இதன்படி கொரோனா எவ்வாறு பரவியது என்பது தொடர்பில் அமெரிக்கா தற்போது விசாரணை நடத்தி வருகின்றது. இந்த நிலையில், ட்ரம்பின் குற்றச்சாட்டுக்கு வலுச்சேர்க்கும் விதமாக நோபல் பரிசுவென்ற விஞ்ஞானி லூக், 'கொரோனா ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது' என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகமெங்கும் பேரழிவை ஏற்படுத்தும் கோவிட்19 (கொரோனா வைரஸ்), வுகான் நகர ஆய்வுக்கூடத்தில் எச்.ஐ.வி.க்கு எதிரான தடுப்பூசி உருவாக்கும் முயற்சியின் விளைவாக உருவானதுதான் என்பதைத் திட்டவட்மாகச் சொல்லமுடியும் என்றார். (ம)



# வீடுவீடாகச் சென்று உணவு வழங்கும் ஹரி, மேகன் தம்பதி

லண்டன், ஏப். 21

ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, இங்கிலாந்தின் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஹரி, மேகன் தம்பதியினர் உணவு வழங்கி வருகின்றனர்.

ஹரி - மேகன் தம்பதியினர் தற்போது அமெரிக்காவில் குறியேறியுள்ளனர். அங்குள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அவர்கள் வசித்து வருகின்றனர். லொஸ் ஏஞ்சல்ஸில் செயற்பட்டுவரும் புரோஜெகட் ஏஞ்சல்ஸ் பூட் நிறுவனத்துடன் இணைந்து உணவுப் பொதிகளை அவர்கள் வழங்கி வருகின்றனர்.


ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலையில் உள்ள அங்கவீனர்கள் மற்றும் முதியோர்களுக்கே அவர்கள் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மீள்கின்றது நியூயோர்க்

நியூயோர்க், ஏப். 21

நியூயோர்க்கில் கொரோனாவின் தாக்கம் கடந்த மூன்று நாள்களாகக் குறையத் தொடங்கியுள்ளது என்று நியூயோர்க் நகர ஆளுநர் தெரிவித்தார்.

நியூயோர்க் ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'கடந்து மூன்று நாட்களில் கொரோனா பாதிப்பு விகிதம் முந்தைய நாட்களில் இருந்ததைவிடக் குறைந்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்புக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டவர்க்ளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. கிட்டத்தட்ட நியூயோர்க்கில் 18 ஆயிரம் பேர் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை தற்போது 16 ஆயிரமாகக் குறைந்துள்ளது. இறப்பு விகிதமும் 550க்குக் கீழ் குறைந்துள்ளது' என்றார். (ம)





## கனடாவில் பயங்கரம்

# துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் துயரச்சாவு

ஒட்டாவா, ஏப்ரல் 21


கனடாவில் நேற்று, கனேடியப் பொலிஸாரின் உடைபோன்றதொரு உடையில் வந்த ஆயுததாரி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர். கனடாவின் வடக்கு நகரமான ஸ்கொட்டியாவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதே பகுதியைச் சேர்ந்த கபிரியேல் என்பவரே தாக்குதலை நடத்தியுள்ளார்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்காக கனடாவின் ஊரடங்கு உத்தரவு இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போயுள்ளனர். பிறருக்குச் சந்தேகம் வராமல் இருப்பதற்காக அந்தத் தாக்குதல்தாரி பொலிஸ் சீருடையில் வந்துள்ளார் என்று கனேடிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 23 வயதான பெண் பொலிஸ் அதிகாரியான ஹெய்தி ஸ்டீவன்சன் உயிரிழந்துள்ளார். மக்களின் உயிரை காப்பாற்ற தாக்குதல் நடத்தியவரை எதிர்த்து அவர் போராடியதில் சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டு குழந்தைகளுக்கு தாயான ஹெய்டியின் இறப்பு ஒட்டு மொத்தக் கனடாவையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் தாக்குதல் தொடர்பில் தனது அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டுள்ளார். ஒரு நாடாக இது போன்ற தருணங்களில் நாம் ஒன்றாக இருப்போம் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்போம். நாம் சேர்ந்து பலியான குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவிப்போம். அவர்களுக்கு உதவுவோம்' என்று கனேடியப் பிரதமர் தனது இரங்கல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

1989ஆம் ஆண்டில் நடந்த தனிமனித பைத்தியகார துப்பாக்கிச் சூட்டில் 14 பெண்கள் உயிரிழந்தனர். இதையடுத்து அந்த நாட்டில் துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்டது. இப்போது கனடாவில் பதிவு செய்யாமல் கைத்துப்பாக்கி வைத்திருப்பது சட்ட விரோதமாகும். (ம)



# பேராபத்தான இறுதிச் சடங்கு

டாக்கா, ஏப். 21

பங்களாதேஷில் நடைபெற்ற இறுதிச் சடங்கொன்றில் அரசின் கட்டுப்பாடுகளை மீறி சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் ஒன்றிகூடியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷில் உள்ள தலைமை மத குருக்களில் ஒருவரான அகமட் அன்சாரி நேற்று முன்தினம் இறந்தார். கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக அவரின் இறுதிச் சடங்கில் 5 பேருக்கு மேல் கூடக்கூடாது என்று அரசின் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. எனினும் சுமார் ஒரு லட்சம் வரையிலான மக்கள் இந்த இறுதிச் சடங்கில் ஒன்றுகூடினர்.

பங்களாதேஷில் சுமார் 2,500 பேருக்கு கொரோனா தொற்று உள்ளது. சுமார் 90 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் இந்த இறுதிச் சடங்கால் கொரோனா தொற்று இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆஸி. வீரர்கள் ஊதியம் இழப்பார்கள்!

சிட்னி, ஏப். 20
கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறாமல் இருப்பதால் ஆஸ்திரேலிய வீரர்கள் சிலர் ஊதியத்தை இழக்க வாய்ப்புள்ளது என்று மார்க். ரெய்லர் தெரிவித்தார்.
கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறாமல் இருப்பதால் ஆஸ்திரேலியகிரிக்கெட் சபை பெருமளவு இழப்பைச் சந்தித்துள்ளது. இதனால்ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்தில் 80 வீதம்பிடித்தம்செய்யப்படவுள்ளது. அதேபோல் வீரர்களின் சம்பளத்திலும்பிடித்தம்செய்யப்பட வாய்ப்புள்ளது என்று மார்க் ரெய்லர் தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு என்று தனியான சபை உள்ளது. அந்தச்சபையுடன்ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பேச்சுநடத்தித்தான்ஏதேனும் முடிவை எட்ட முடியும். எனவே இந்த ஊதியப் பிடித்தத்துக்கு ஆஸ்திரேலிய வீரர்களின் சபை மறுப்புத் தெரிவிக்கும் என்றே கருதப்படுகின்றது. (ம)



# எனது துடுப்புமட்டையில் சந்தேகம் கொண்டார்கள்

### யுவராஜ் பகீர் தகவல்

புதுடெல்லி, ஏப். 20
2007ஆம்ஆண்டுநடைபெற்றஉலகக் கிண்ண ரி-20 தொடரில் 6 பந்துகளில் 6 சிக்சர்களை யுவராஜ் விளாசினார். இந்த அதிரடியை அடுத்து தனது துடுப்பு மட்டையின் தயாரிப்புத் தொடர்பில் உலக வீரர்கள் குறிப்பாக ஆஸ்திரேலியர்கள் சந்தேகம் கொண்டனர் என்று தெரிவித்துள்ளார் யுவராஜ்.
உலகக்கிண்ண நினைவலைகளை மீண்டியுள்ள யுவராஜ் மேலும் தெரிவித்ததாவது:
ஆஸ்திரேலிய பயிற்சியாளர் அப்போது என்னிடம்வந்து என் துடுப்புமட்டையில் பைபர் உள்ளதா என்றார். அது சட்ட பூர்வமானதா? ஆட்ட நடுவருக்குத் தெரியுமா? என்றார். அதனால் நான் அவரிடம் நீங்களே செக் செய்து கொள்ளுங்கள்என்றேன். ஏன் அடம் கில்கிறிஸ்டின் துடுப்பு மட்டைகளை யார் தயாரிக்கிறார்கள்? என்றார். ஆட்ட நடுவரும் என் துடுப்புமட்டைகளைப் பரிசோதித்தார். ஆனால்உள்ளபடியேசொல்லவேண்டுமெனில் எனக்கு அந்தத் துடுப்புமட்டை தனிச் சிறப்பானது. அதேபோல் 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் பாவித்த துடுப்பு மட்டையும் தனிச்சிறப்பானது - என்றார். (ம)

### ஐபிஎல் போட்டியை

# இலங்கையில் நடத்த முரளிதரன் எதிர்ப்பு

ஐபிஎல் தொடரை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், முரளிதரன் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டியை கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் மே மாதம் 24ஆம் திகதி வரை நடத்த பிசிசிஐ திட்டமிடப்பட்டு இருந்தது.
கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக போட்டி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.
இதற்கிடையே ஐபிஎல் போட்டியை நடத்த இலங்கை விருப்பம் தெரிவித்து இருந்தது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இந்தப் போட்டியை நடத்த தயார் என்றும், இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைக்கு விரைவில் கடிதம் எழுதுவோம் என்றும் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்து இருந்தார்.
இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.
இந்த நிலையில் ஐபிஎல் போட்டியை இலங்கையில் நடத்துவது ஆபத்து என்று இலங்கை அணியின் முன்னாள் பிரபல சுழற்பந்து வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஐபிஎல் போட்டியை இலங்கையில் நடத்துவது குறித்து பேச்சுவார்த்தை அளவிலேயே இருக்கிறது. எனக்கு தெரிந்து இது ஒரு நிரந்தர தீர்வாகாது. முதலில் கொரோனா பாதிப்பு உலகம் முழுவதும் முற்றிலும் நீக்கப்பட வேண்டும். அதில் இலங்கையும் விதிவிலக்கல்ல.
இலங்கையில் போட்டி நடந்தால் வெளிநாட்டு வீரர்கள் இலங்கைக்கு வருவார்கள். அவர்களை தனிமைப்படுத்த வேண்டும். இது மிகப்பெரிய ஆபத்தை வீரர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்படுத்தும் - என்றார்.


# டோனி, ரோகித் சர்மா சிறந்த தலைவர்கள்!!

புதுடெல்லி, ஏப். 20
ஐ.பி.எல் தொடரில் டோனி, ரோகித் இருவரும் இணைந்து சிறந்த தலைவர்களாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
ஐ.பி.எல் தொடர் அறிமுகமாகிநேற்றுடன்12 வருடங்கள்நிறைவடைந்துள்ளன. இதை முன்னிட்டு பிலபல இணையத்தளமொன்றுஐ.பி.எல்தொடரில்யார்சிறந்ததலைவர் என்று கேள்வியெழுப்பி இருந்தது. வழங்கப்பட்ட வாக்குகளை அடிப்படையாகவைத்துடோனியும், ரோகித் சர்மாவும் சிறந்த தலைவர்களாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
டோனி அனைத்துத் தடவைகளும் சென்னை சுப்பர்கிங்ஸைபிளேஓவ் சுற்றுக்கு அழைத்துச் சென்றுள்ளார். மூன்று தடவைகள்கிண்ணத்தை வென்று கொடுத்துள்ளார். ரோகித் சர்மா நான்கு தடவைகள் கிண்ணம் வென்று கொடுத்துள்ளார். (ம)




# ரசிகர்கள் இன்றி டென்னிஸ் போட்டியா?

### சிமோனா ஹாலெப் எதிர்ப்பு



ரசிகர்கள் இல்லாமல் போட்டியை நடத்துவதற்கு விம்பிள்டன் சம்பியனும், முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையுமான சிமோனா ஹாலெப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.
ரசிகர்கள் இன்றி மூடிய மைதானத்தில் டென்னிஸ் விளையாடுவது தொடர்பில் சமீபத்தில் செர்பியா வீரர் ஜோகோவிச்சும், ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடாலும் விவாதித்தனர். இதற்கு அவர்கள் ஆதரவும் தெரிவித்தனர்.
ஆனால் ரசிகர்கள் இல்லாமல் போட்டியை நடத்துவதற்கு விம்பிள்டன் சம்பியனான ரூமேனியா வீராங்கனை சிமோனா ஹாலெப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்;
ரசிகர்கள் இன்றி டென்னிஸ் ஆடுவது சரியாக இருக்காது. மிகப்பெரிய போட்டிகளில் நாங்கள் மிகவும் உற்சாகமாக, ரசித்து விளையாடுகிறோம் என்றால், அதற்கு ரசிகர்கள் அளிக்கும் உத்வேகமும், கரகோஷமும் தான் காரணம். இல்லாவிட்டால் டென்னிஸ் வேறு விளையாட்டாகி விடும்- என்றார்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.